மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்

அ.வ.எண். 97/2019

வாசா.1

தேதி:- 22.10.2021

பெயர் :- சிவகாமி க/பெ .-மகாதேவன்

வயது :- 55 தொழில்:-

கிராமம் :- தாலுகா:- ஸ்ரீவைகுண்டம்

1873ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் 10வது பிரிவின் படி 2021 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் தேதி 22 ஆம் நாள் உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

நான் இந்த வழக்கில் வாதி. எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிருபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கின் விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியும். நான் தான் வழக்கறிஞருக்கு கூறினேன்.

09.09.1987 எனது முன்பாத்தியஸ்தர் சங்கரன் என்ற சங்கான் பெயரில் பிளாட் நம்பர் 24 ஐ பொறுத்து திருவைகுண்டம் வட்டாட்சியரால் வழங்கப்பட்ட வீட்டுமனை பட்டா நோட்டரிக் பப்ளிக் சான்றிட்ட நகல் வாசாஆ1

09.09.1987 எனது முன்பாத்தியஸ்தர் உண்ணாமலையம்மாள் பெயரில் பிளாட் நம்பர் 25 ஐ பொறுத்து திருவைகுண்டம் வட்டாட்சியரால் வழங்கப்பட்ட வீட்டுமனை பட்டா நோட்டரிக் பப்ளிக் சான்றிட்ட நகல் வாசாஆ2

24.05.1990 எனது முன்பாத்தியஸ்தரும் என் மாமனாருமான பாடலிங்கத்தேவர் அவர்களுக்கு கண்ணுத்தேவர், இசக்கிதாய் ஆகியோர்கள் எழுதிக் கொடுத்த பதிவு செய்யப்படாத கிரைய பத்திரம் நோட்டரிக் பப்ளிக் சான்றிட்ட நகல் வாசாஆ3

13.02.1995 எனது முன்பாத்தியஸ்தரும் மாமனாருமான பாடலிங்கத்தேவர் அவர்கள் எனது கணவரான மகாதேவனுக்கு எழுதிக் கொடுத்த பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல் வாசாஆ4

07.08.2006 என் கணவரான மகாதேவன் எனக்கு எழுதிக் கொடுத்த

*பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரம் சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல் வாசாஆ5*

*14.09.2018 நான் தூத்துக்குடி சார் ஆட்சியரிடம் வழங்கிய புகார் மனுவின் கைப்பிரதி வாசாஆ6*

*25.09.2018 தூத்துக்குடி சார் ஆட்சியர் அலுவலகத்திலிருந்து எனக்க வரப்பெற்ற குறிப்பாணை நகல் வாசாஆ7*

*17.10.2018 திருவைகுண்டம் வட்டாச்சியர் அலுவலகத்திலிருந்து எனக்கு வரப்பெற்ற விசாரணை அறிவிப்பு நகல் வாசாஆ8*

*23.10.2018 திருவைகுண்டம் வட்டாச்சியர் அலுவலகத்திலிருந்து எனக்கு வரப்பெற்ற மேலெழுத்து நகல் வாசாஆ9*

*18.06.2018 எனது பெயருக்கு 48 மீட்டர் அளவுள்ள வீட்டு மனைக்கு மட்டும் ஏற்பட்ட நத்தம் நிலவரித்திட்ட தூய சிட்டா நகல் வாசாஆ10*

*பிராது 1வது தபசில் சொத்தை பொறுத்த மாதிரி வரைபடம் வாசாஆ11*

*பிராது 1வது தபசில் சொத்தின் வழிகாட்டி மதிப்பை காண்பிக்கக் கூடிய அறிவிப்பு பதிவுதுறை இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது வாசாஆ12*

*பிராது 1, 2வது தபசில் சொத்துக்களின் பூமி நில அமைப்பை காண்பிக்கக் கூடிய புகைப்படங்கள் 3 எண்ணிக்கை ( சிடி உடன் ) வாசாஆ13*